தினமலர்

# 'அவார்டு ஆப் எக்சலன்ஸ்' விருது வழங்கி கவுரவம்



■ கோவை ரோட்டரி சங்கம் சார்பில் அத்தாச்சி குழுமத்தைச் சேர்ந்த விஸ்வநாத்துக்கு, ''அவார்ட் ஆப் எக்சலன்ஸ்'' விருது வழங்கி கவுரவிக்கப்பட்டது.

**கோவை, அக். 10–**

கோவை ரோட்டரி சங்கம் சார்பில், அத்தாச்சி குழுமத்தைச் சேர்ந்த விஸ்வநாத்துக்கு, 'அவார்டு ஆப் எக்சலன்ஸ்' விருது வழங்கி கவுரவிக்கப் பட்டது.

பாலக்காட்டில் வறண்டு போன, 20 ஏக்கர் நிலத்தை இயற்கை சார்ந்த தொழிநுட்பம் மூலம் பல்லுயிர் வேளாண் வனப்பண்ணையாக மாற்றி யதற்காக, இவ்விருது வழங்கப்பட்டது.

இவ்விருதை, கோவை ரோட்டரி சங்க மாவட்ட கவர்னர் சுந்தரவடிவேலு வழங்கினார். இந்தியாவின் பழமையான வேளாண் வழிமுறை களான ரிஷி க்ரிஷி, விருக்ஷயுர்வேதம் மற்றும் தபோல்கர், பிரானிக், மியாவாகி, உள்ளிட்ட பல தொழில்நுட்பங்களை ஒன்றாக கொண்டு, 'அத் தாச்சி டிரஸ்ட் நேச்சர்' எனும் திட்டத்தை, விஸ் வநாத் உருவாக்கியுள்ளார்.

பாலக்காடு எலப்புள்ளி கிராமத்தில் வறண்ட, 20 ஏக்கர் நிலத்தை பல்லுயிர் வேளாண் பண்ணை யாக மாற்றியதால், விலங்குகள், தாவரங்கள், பற வைகள், மனிதர்கள் மகிழ்ச்சியுடன் இணைந்து வாழும் பல்லுயிர் நிறைந்த, வேளாண் வனப்பண் ணையாக உயிர்பெற்றுள்ளது. கோவை ரோட்டரி சங்க நிர்வாகிகள், அத்தாச்சி குழுமத்தைச் சேர்ந்த விஸ்வநாத்தை பாராட்டி, வாழ்த்து தெரிவித்தனர்.